# தமிழியலும் மனிதவளமேம்பாடும்

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

**நாள் : 14-15 மார்ச் 2020**




தொகுப்பாசிரியர்கள்

**முனைவர் இரா. கருணாநிதி**

**முனைவர் கி. சிவகுமார்**

**Research Awardee முனைவர் சி. புவனேஸ்வரி**

**முனைவர் வெ. இராணி**



**தமிழ் உயராய்வுத்துறை**

**திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி** (நிலை-1)

விருத்தாசலம் - 606 001, கடலூர் மாவட்டம்

# தமிழியமும் மனிதவளமேம்பாடும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

*14, 15 மார்ச் 2020*


தொகுப்பாசிரியர்கள்

முனைவர் **இரா. கருணாநிதி**

முனைவர் **கி. சிவகுமார்**

Research Awardee முனைவர் **சி. புவனேஸ்வரி**

முனைவர் **வெ. இராணி**

**தமிழ் உயராய்வுத்துறை**

**திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி** (நிலை-1)

விருத்தாசலம் - *606 001*, கடலூர் மாவட்டம்.



**இராஜா பப்ளிகேஷன்ஸ்**

நெ.10, மேல் தளம், இப்ராஹிம் நகர்,

காஜாமலை, திருச்சி-620 023.

Cell : 96005 35241

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழியமும் மனிதவளமேம்பாடும் |
| பதிப்பாசிரியர் | : | பதிப்புக்குழு |
| உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| பதிப்பு | : | 2020 |
| நூலின் அளவு | : | டெம்மி |
| அச்சு எழுத்து | : | 10.5 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | (xiv) + 434 =448 |
| விலை | : | 300/- |
| ஒளி அச்சு | : | விஷண் கிராபிக்ஸ், திருச்சி. |
| அச்சிட்டோர் | : | தி பிரிண்டிங் ஹவுஸ், திருச்சி-23.<br>போன் : 0431-2420121 |
| வெளியிட்டோர் | : | **இராஜா பப்ளிகேஷன்ஸ்**<br>நெ.10, மேல் தளம், இப்ராஹிம் நகர்,<br>காஜாமலை, திருச்சி-620 023.<br>Cell : 9600535241 |
| ISBN No | : | 978-93-87946-29-3 |

- *Name of the Book : Thamizhiyamum Manithvalamembadum*
- *Compiled by : Dr. R. Karunanidhi*
- *Size : 1/8 Demmy*
- *Printing Point : 10.5*
- *Pages : (xiv) + 434 = 448*
- *Edition : 2020*
- *Rate : Rs.300/-*
- *Computer Printing : Vishan Graphics, Trichy-23.*
- *Publishers : Raja Publications, Trichy-23.*
- *Offset Printing : The Printing House, Trichy-23.*
- *ISBN No : 978-93-87946-29-3*

# திருக்குறளில் நல்லிணக்கச் சிந்தனைகள்

**திரு. ச. பத்மநாபன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழில் நீதிநூல் இலக்கியவரிசையில் திருக்குறள் முக்கியத்துவம் பெறுகிறது. முப்பால் என திருவள்ளுவரால் இயற்றப்பட்ட இந்நூல் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகின்றது. சமுதாயத்தின் புதிய சவால்களாக மாறும் நல்லிணக்கச் சிந்தனைகள் பலவற்றை முன்னுதாரணமாகக் கூறும் தனித்துவச் சிறப்பு திருக்குறளில் தனித்த முத்திரையாக அமைகின்றது. பொதுவாக திருக்குறளின் அறத்துப்பால் அறம், தர்மம் எனும் பெயர் விளக்கத்திற்குரியதாக காணப்பட்டாலும் மாறிவரும் உலகமயமாதலில் நல்லிணக்கச் சிந்தனைகள் வளர்ச்சியும் வளமும் பெறவேண்டியது அவசியமான தொன்றாகும். சமயம், சமூக வாழ்வியல், பண்பாட்டு கலப்பு போன்றவைகளின் வளர்ச்சிக்கான பாதையில் சமூகத்தினரிடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றன. சமயம், பண்பாடு நாடு, மொழி, இனம் எனப் பரந்துபட்ட விடயங்களில் நல்லிணக்கம் ஏற்படத்தக்க பரந்த மனப்பாங்கினை உருவாக்கத்தக்க விடயங்கள் அறத்துப்பாலின் இல்லறவியலில் எட்டாம் அதிகாரம் முதல் இருபத்தி நான்காம் அதிகாரம் வரை முன்வைக்கப்படுகின்றன. இதற்குமேலாக உயர்ந்த தன்மையாகவும் நல்லொழுக்கமாகவும் கொள்ளத்தக்க விடயங்கள் துறவறவியலில் இருபத்தைந்தாம் அதிகாரம் முதல் முப்பத்து மூன்றாம் அதிகாரம் வரைபேசப்படுகின்றன. இவ் விடயங்களின் மீள்வலியுறுத்தல் நல்லிணக்க சிந்தனைகளை வளம்படுத்துவதாக அமையும் தன்மைகள் இலக்கியவிவரண ஆய்வு, பகுப்பாய்வு எனும் ஆய்வுமுறையியலினூடாக திருக் குறளின் பரந்த உரைவளத்தினூடாக முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாய்வினூடாக முரண் பாடற்ற தன்மையில் பரந்தமனப்பாங்கு உருவாகும் தன்மையில் பல்வேறுவிதமான நடத்தை சார்ந்த நல்லிணக்கங்கள் உயர்ந்த சிந்தனைகள் திருக்குறளில் எவ்வாறு வலியுறுத்தப பட்டுள்ளன என்னும் தன்மைகள் வெளிக்கொணரப்படும்.

**திறவுச்சொல்:** திருக்குறள், அறம், தர்மம், நல்லிணக்கம், உலகமயமாதல்.

## அறிமுகம்

தமிழ் இலக்கிய வரிசையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் ஒன்று திருக்குறள் ஆகும். இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இந்நூல் அறம், பொருள், இன்பம் எனும் மூன்று உறுதிப் பொருட்களை விரிவு பட 133 அதிகாரங்களாக 1330குறட்பாக்களை உள்ளடக்கமாகக் கொண்டது. தமிழ் இலக்கிய மரபில் நீதி நூல் எனும் சிறப்புடையது. உலகப் பொதுமறையெனப் போற்றப்படுவது. இந்தியாவில் பிறமொழிகளிலும் மேற்குல நாட்டு மொழிகளிலும் இந்நூலை அறிஞர்கள் மொழிபெயர்த்துள்ளனர். இந்நூல் 123 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதாக அறிஞர்கள் சுட்டுகின்றனர். எனினும் 80க்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புக்கள் பதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறட்பாவடிவில் உலக நாடுகள் அனைதிலும் பொதுவான உண்மைகளை காலமும் இடமும் கடந்து சுட்டிநிற்பது திருக்குறளின் தனித்துவமான அடையாளமாகும். இலக்கியச் செழுமையும், கவித்துவச் சிறப்புமுடைய இந்நூலுக்கு பத்து உரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் பரிமேலழகர் உரைசிறந்தாகப் போற்றப்படுகின்றது.

திருக்குறள் 38 அதிகாரங்களை அறத்துப்பாலிலும் 70 அதிகாரங்களை பொருட்பாலிலும் 25 அதிகாரங்களை காமத்துப்பாலிலுமாக நூற்று முற்பத்துமூன்று அதிகாரங்களை உள்ளடக்கமாகக் கொண்டதாகும்.

திருக்குறள் தனி மனித வாழ்க்கையிலும் சமூதாய வாழ்க்கையிலும், நீதிநூல்எனும் தளத்தில் கொள்ளத்தக்கவை, கொள்ளத்தகாதவை என வரையறுதின் கூறும் சிறப்பு நல்லிணக்க சிந்தனைகளை உலகப் பொதுமறையெனும் நிலையில் உறுதிபடக் கூறும் தன்மையதாக விளங்குகின்றது.

## நல்லிணக்கம்

திருக்குறள் புராதன இந்தியத் தமிழர்களது வாழ்வியலை தனிமனித வாழ்வியலாகவும், சமூக வாழ்வியலாகவும் வெளிப்படுத்திக்காட்டும் இலக்கியமாகத்திகழ்கின்றது. இவ்விலக்கியத்தில் சமூகம் மேன்மை பெறவும் பண்படவும் தனிமனித மற்றும் சமூக நெறி முறைகளை நீதியாகக்கூறி செய்யத்தக்கன என வகைப்படுத்தி பரப்பப்படுகின்றது. உலகப் பொதுமறையெனும் நிலையில் பண்புடைய சமூதாய வாழ்வில் தனிமனித வாழ்வில் அடித்தளமாகின்றது. அவ்வகையில் பல்லின மொழி பேசுபவர்கள்,

பல வகை சமயத்தைச் சார்ந்தவர்கள். பலவகை பண்பாடுகளைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் குறிப்பாக தமிழ் சமூகத்தவர்கள் தனிப்பெரும் அடையாளமாக விளங்குவது அவர்களது பண்பட்ட வாழ்வியல் முறைமையாகும். அவை உலகமயமாதலில் பரந்த மனதையுடைய சமூதாயப்பார்வையில் அனைவரும் பின்பற்றத்தக்க பொதுத்தன்மை நல்லிணக்க செயற்பாட்டின் ஆணிவேராகத்திகழ்கின்றது. பல்வேறுபட்ட நிலைகளிலும் மாறிவரும் தனிமனித வாழ்வு, பல்வேறுபட்ட புண்பாட்டக் கலப்பாலும், சிறப்பாக மேற்குலக நாட்டு வாழ்வியல் முறைமை சமூக ஒருங்கினைப்பை தகர்த்தெறியும் தொடர்ச்சியான பொறிமுறையாக அமைகின்றது. இத்தகைய செயற்பாட்டை வாழ்வியல் ரீதியாகக் கூறும் தனித்துவம் திருக்குறளில் காணப்படுகின்றது. அத்தகைய நன்மைகள் உலக வாழ்வியல் நெறிமுறைக்கு நல்லிணக்கஉலகசிந்தனையாக அமைவதனை நோக்குவோம்.

## அறம்

அறம் எனும் சொல் சம்ஸ்கிருதத்தில் தர்மம் எனும் சொல்லுக்கு நிகரானது என்பர். தர்மம் என்பது காலத்திற்கு காலம் மிகப்பரந்த கருத்தை உள்ளடங்கலாகக் கொண்டது. பொதுவாக தர்மம் என்பது தமிழில் அறம் எனும் சொல்லால் சுட்டிக்காட்டப்படுவதும் திருக்குறளின் அறத்துப்பால் தர்ம சாஸ்திரம் என்பதற்கு நிகராகக் கொள்ளத்தக்க தன்மையதாக அமைகின்றது. எனினும் சொற்பொருள் விளக்கத்தினடிப்படையில் பயன்பாட்டு நிலையில் பரந்த நிலையில் அச்சொற்கள் பொருளுணர்த்தும் தன்மையை உள்ளடக்கமாகக் கொண்டன என்பதும், இலக்கணத் தத்துவத்தில் அவை உணர்த்தும் சொற்பொருள் தத்துவம் பரந்த நோக்குடைய பண்பாட்டைக் கொண்டு விளங்குகின்றன. அவ்வகையில் திருக்குறள் அறநூல் என்பதற்கு நிகராக நீதி நூல் என்னும் வாழ்வியல் நீதியைக் கூறும் நூல் என்பதும் சுட்டிக்கபட்டப்படுகின்றது.

## திருக்குறளின் அறத்துப்பால்

திருக்குறளின் அறத்துப்பால் 38 அதிகார உள்ளடக்கத்தில் 1-4 அதிகாரங்கள் பாயிரம் என்றும் இல்லறவியல் என 5-24 அதிகாரங்களும், துறவறிவியல் என 25-38 அதிகாரங்கள் எனப் பரிமேலழகர் பாகுபடுத்துகின்றார். துறவறவியலில் விரதம் என 25-33 வரையான அதிகாரங்களும் ஞானம் என 34-37 வரையான அதிகாரங்களும் ஊழ் என 38வது அதிகாரமும் பயன்படுத்தப்படுகின்றது.

திருக்குறளின் பொருட்பாலிலும் நல்லிணக்க சிந்தனைகள் பல விளங்குகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

**செய்யத்தக்கவை**

**அன்புடைமை அதிகாரம்**

திருக்குறளின் அறத்துப்பாலின் எட்டாம் அதிகாரமான அன்புடைமையில் அன்பின் உயர்ந்த தன்மையும் அன்பு என்பது உயிர்மைக்கு அடையாளமாகச் சுட்டுவதோடு தூய அன்பு என்பது (78) வலியுறுத்துகின்றது.

உடம்பு, உயிர் எனும் இருநிலையிலும் உயிரிற்கலந்த அன்பு எனும் தன்மை பேசப்படுவதோடு தூய அன்பு நட்பு எனும் உயர்ந்த தன்மையதாக நல்லிணக்கம் பேசப்படுகின்றது. அதனைத் திருக்குறள்

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு(74)

எனச் சுட்டுவது குறிப்பிடத்தக்கது.

**அன்பும் உயர்ந்த மனமும்**

திருக்குறளின் அறத்துப்பாலின் ஒன்பதாம் அதிகாரமாகிய விருந்தோம்பல் முதல் பதினாலாம் அதிகாரம் வரையான ஆறு அதிகாரங்களில் சமூக உறவாட்டங்களில் அனைத்து உயிர்களையும் உயர்வாகக் கருத வேண்டும் எனும் உயர்ந்த மனப்பாங்கும் அதனையடுத்து சமூக நல்லிணக்க செயற்பாடுகளில் சமூக நல்லுறவிற்காக சமயம்,மொழி கடந்த தன்மையில் பண்புடைய செயற்பாடுகள் அன்பை அடித்தளமாகக் கொண்டு பேசப்படுகின்றன.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் எனும் ஒன்பதாம் அதிகாரம் இல்லறவியலின் பண்பாக விருந்தோம்புதல் உணவளித்துண்ணுதல் பகிர்ந்துண்ணுதல், பலரிடமும் அன்பு வைத்து விருந்து உபசரித்தல் எனப் பேசப்படுகின்றது.

செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு (86)

மேலும் பல்மறு உலகவாழ்வின் பயனையும் தரவல்லது என்பதும் இதில் மேலும் வலியுறுத்தப்படுகின்றது.

**இனியவை கூறல்**

இனியவை கூறல் எனும் பத்தாம் அதிகாரத்தில் மனமகிழ்வின் வெளிப்பாடகிய பண்பட்ட அன்புடையவர்களது சொல் வெளிப்பாடு இனிய சொற்களைச் சொல்லுதல் என்றவாறாக கனிவோடு பேசுதல் எனும் நல்லிணக்க உருவாக்கம் இதனூடாக சுட்டப்படுகின்றது.

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார் வாயிற்சொல் (91)என்றும்
பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்
கணிஅல்ல மற்றுப் பிற (95)என்றும்

இன்சொல் பேசும் நல்மனப்பாங்கு உயர்ந்த பண்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

## செய்நன்றி அறிதல்

செய்நன்றியறிதல் எனும் பதினோராம் அதிகாரத்தில் பிறர் மூலமாகக் கிடைக்கப்பெற்ற நன்மைகளை மறவாமையெனும் பண்புக்கு மேலாக அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட நன்றிக்கு நன்றிக் கடனாக இருப்பதே செய்ந்நன்றியறிதலாகப் பேசப்படும் பண்பு உயர்ந்த பண்பட்ட மனித நேயத்தையும் உயர்வு தாழ்வற்ற உயர்ந்த மனப்பாங்கையும் மனித நல்லிணக்த்தையும் தருவதாக அமைகின்றது.

நன்றி மறப்பத நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பதுநன்று (108)

எனும் குறளூடாக எமது எண்ணம் செயல் பயன்கருதாது பரோபகார மனம் என்பதை சேவையின் உயர்பண்பாகக் கூறப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது.

## நடுவுநிலைமை

நடுவுநிலைமையெனில் பன்னிரெண்டாம் அதிகாரம் அறத்தின் வழி கோடாது நிற்றல் என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. பகை, நொதுமல், நட்பு என்பவை விடாது ஒழுகுவதற்கான பொறிமுறையாகவும் சுட்டப்படுவதுடன் நீதியின் முன் அனைவரும் சமம் என அறத்தின் மேன்மை சமூகத்தில் நல்லிணக்கத்தின் உயர்ந்த பண்பாக கொள்ளப்படுகின்றது. இதன் உயர்வு இவ்வதிகாரம் முழுவதும் பேசப்படினும் அதன் உயர்வை குறள் பின்வருமாறு காட்டுகின்றது.

கேடும் பெருக்க மில்லல்ல நெஞ்சத்துக்
கேடாமை சான்றோர்க் கணி (115)

என மனச்சாட்சியினை உயர்ந்த தன்மையாகக் சுட்டுவது குறிப்பிடத்தக்கது.

## அடக்கமுடைமை

அடக்கமுடைமை செய்தல் பதின்மூன்றாம் அதிகாரம் உடல், மொழி, மனம் ஆகியவை தீயவழி சொல்லாது மன அடக்கத்துடன்

இருக்கும் உயர்ந்த பண்பு பேசப்படுவதுடன் மனம் நோகாது நடத்தல், அடக்கத்துடன் இருத்தல், பிறர் துன்புறும் வார்த்தைகளைக் கூட பேசாதிருத்தல் எனும் முத்திறம் பணிவு, பண்பு என்பவைகளை தெளிவாக அமைகின்றது.

நிலையிற் றியொ தடங்கியான் தோற்ற
மலையிறு மாணப் பெரிது (124)

எனும் குறள் பெருமனம் எனும் உயர்ந்த எண்ணத்தைத் தெளிவாக அமைகின்றது.

**ஒழுக்கமுடைமை**

ஒழுக்கமுடைமையெனும் பதினான்காம் அதிகாரம் நடத்தையினைத் தரும் தன்மையில் தீயவைகளை நீக்கி அறத்தின் வழி அனைத்துயிர்களிடமும் அன்பும், நட்பும் கொண்டு ஒழுகுதல் என்பதுடன் உயர்ந்த மனப்பாங்காகக் கொள்ளப்படுகின்றது. சமுதாய மாற்றத்தில் தீய எண்ணங்களாலும் சமூதாயத்தைச் சிதைவடையக் கூடிய செயற்பாடுகளும் ஒவ்வொரு மனிதனாலும் நீக்கப்பெறுமிடத்து அவை நேரிய சிந்தனையுடையதாக விளங்குவதும் உயர்ந்த மனம் படைத்த பண்பாக மாற்றம் பெறுவதும் ஒழுக்கத்தின் தனியடையாளமாக அமைகின்றது.

ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்கம்
முயிரினு மேம்பப்படும் (131)

ஏன உயிருக்க சமமான எண்ணம், உயர்ந்த மனம், புடைக்கலம், பண்பட்ட மனவெண்ணம் என்பவைகளின் தனித்த அடையாளமாக ஒழுக்கம் உயர்வு பெறுகின்றது.

இவ்வாறாக அறாவது அதிகாரங்களிலும் புறக்கண்கொண்டு பார்க்க முடியாததும் மனத்தில் மாசற்றதன்மையுடன் அன்பும் உயர்ந்த மனமும் அதனூடான உயர்ந்த பண்பும் சமூதாய நல்லிணக்கத்தில் செய்யத்தக்க தன்மையுடன் தனிமனிதன் முதல் சமூதாய ஒருமைப்பாட்டை அடித்தளத்திலிருந்து தெளிவுபடுத்துவது காலத்தின் கட்டாய தேவையாக அமைகின்றது. சமூதாய மாற்றத்தால் பல்லின சமூக ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் வலுப்படுவதில் அடிப்படைச் செயற்பாடுகளாக இவையமைந்து காணப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது.

**செய்யத்தகாதவை**

சமுதாய நல்லிணக்கத்தில் எத்தகைய விடயங்கள் மன எண்ணத்திற்கூட இடம் பெறத்தகாதது எனக்கருதி "ஆமை" என

இடம் பெறத்தக்கதன்மையில் மனவுயர்ச்சியுடன் சமூதாய வளர்ச்சியும் பெறத்தக்க விடயங்கள் பதினைந்தாம் அத்தியாயம் முதல் இருபதாம் அத்தியாயம் வரை இடம்பெறுவது சுட்டிக்காட்டத்தக்கது.

உயர்ந்த சமூதாயம் எனப்போற்றத்தக்கதாக தன்மையில் தனிமனித வாழ்வில் மனமாற்றத்தில் கூட செய்யத்தகாதன என மிகவும் வலியுறுத்த பின் கூறுவது குறிப்பிடத்தக்கது.

### பிறனில் விழையாமை

ஒழுக்கத்தில் உயர்வில் மன அடக்கம் அவசியம் என்றும் மன அடக்கத்திலிருந்து பிறழ்தல் நிகழத்தக்க விடயங்களை தெளிவுபடுத்துவது திருக்குறளின் தனித்தவமான ஆளுமைகளாகும். பிறனில் விழையாமை எனும் பதினைந்தாம் அத்தியாயம் தன்மனைவியை விடுத்து பிறன் மனைவியை நாடுதல் ஒழுக்கக்கேடு என்பதனைத் தெளிவுபடக் கூறியுள்ளார்.

பகைபாவம் அச்சம் பழி என நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண் *(146)*

செய்யத்தகாதன என்பதற்கு மேலாக குற்றம் எனச்சாட்டுவது கவனத்திற் கொள்ளத்தக்கது.

### பொறையுடைமை

பொறையுடைமை எனும் பதினாறாம் அதிகாரம் மடைமைத்தனத்தின் பின் நன்மைகளை செய்யத்தகாதவையாகச் சுட்டுவது குறிப்பிடத்தக்கது.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை *(151)*

இங்கு பொறுமை மிகவும் மேலான தன்மையாகவும் பேசப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது.

### அழுக்காறாமை

அழுக்காறாமை எனும் பதினேழாம் அதிகாரம் பிறரது செயல்கள், முன்னேற்றங்கள் போன்றவைகளைக் கண்டு பொறாமை கொள்ளாமை என்பதாகும். அச் செயற்பாடு நல்லிணக்க சிந்தனையுள் மேன்மையானதாகும்.

ஒழுக்காறாக் கொள்ள ஒருவன் தன் நெஞ்சத்
தழுக்க றில்லாத இயல்பு *(161)*

என மனதில் தீய அழுக்குடைய எண்ணங்களில் இருக்கக் கூடியவைஎன்பதை இவ்வதிகாரம் தெளிவுபடுத்துகின்றது.

**வெஃகாமை**

வெஃகாமை என்பதினெட்டாம் அதிகாரம் பிறரது பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு ஆசைப்படக்கூடாது எனக்கூறுவதோடு அதனையும் குற்றமாகக் கூறுவதும் நல்லிணக்க செயற்பாட்டின் உயர்நிலைத்தன்மையை இட்டுச் செல்லும் செயல்களாக அமைகின்றது.

நடுவின்றி தன்பொருள் வெஃகின்குடியொன்றிக்
குற்றடும் ஆங்கே தரும். (171)

எனத் தெளிவுபடக் கூறுவது சுட்டிக்காட்டத்தக்கது.

**புறங்கூறாமை**

புறங்கூறாமை எனும் பத்தொன்பதாம் அதிகாரம் ஒருவரை அவரில்லாதவிடத்து இகழக்கூடாது என்பதைத் தெளிவுபடக் கூறுகின்றது.

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது (181)

இதில் மனம், மொழி இவைகளாலும் ஒருவரை இகழக்கூடாது எனும் நல்லிணக்க எண்ணம் உயர்வுடையதாகும்.

**பயனில சொல்லாமை**

பயனில சொல்லாமை எனும் இருபதாம் அதிகாரத்தில் பயனற்ற சொல் குற்றம் விளைவிக்கும் தன்மையது எனும் உயர்வில் நல்லிணக்க சிந்தனையாகக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பயன்இல பல்லார்முன் கொல்லலி நயன்இல
நட்டார்கய் செய்தலிற் றீது (192)

இவ்வாறாக செய்யத்தகாதன என மன எண்ணத்தினால் கூட செய்யத்தகாத குற்றங்களைக் கூறியிருப்பது சமூக நல்லிணக்க எண்ணங்கள் மேன்மைபெறுவதற்கான தன்மையடைகின்றன.

செயல்களின் வழி செய்யத்தகாதனவாக தீவினையாக்கும் பேசப்படுவதோடு நல்லிணக்கம் என்பதற்கு ஏற்ப ஒப்புரவறிதல், என்னும் அதிகாரம் உலக நடையினை அறிந்து செய்தல் என்பதுநன்கு வலியுறுத்தப்படுகின்றது.

ஈகையென்னும் கொடை புண்ணியமுடையதாகவும் “புகழ்” இவ்வுலக வாழ்க்கையில் உயிர்க்கு மேலான செயலாகவும் சுட்டிக்காட்டப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது.

துறவறவியலின் அன்புடைமைக்கு நிகராக அருளுடைமை சுட்டப்படுகின்றது. இதற்கு மேலாக செய்யத்தகாதன எவையவையோ

அவையனைத்தும் சுட்டிக்காட்டப்படுவதும் அச் செயல்கள் பாவங்களையும் குற்றங்களையும் மறுத்து செய்யத்தகாதவையும் சாட்டுதல் சமூதாய வளத்திற்கும் நல்லிணக்க முறைமைக்கும் ஏற்புடையவையாக அமைகின்றன. அதன் வழி புலான்மறுத்தல், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெருளாமை, இன்னாசெய்யாமை, சொல்லாமை எனும் அதிகாரங்களுள் தனிமனித செயற்பாடுகளினால் சமூக நல்லிணக்கமே சிதைவடையும் தன்மைகள் இன்று எவ்வாறெல்லாம் மேலோங்கிநிற்கின்றதோ அவைகனைத்தையும் திருவள்ளுவர் தீர்க்கதரிசனமாகக் கண்டு சமுதாய ஒருங்கமைவை ஏற்படுத்தமுற்பட்டார் என்பது இங்கே சிந்தனைக்குரியது.

## நிறைவுரை

திருவள்ளுவரின் திருக்குறளில் அறத்துப்பாலில் செய்யத்தக்கவை என முதற்கண் இல்லறவியலில் அன்பும் துறவறவியலில் அருளும் கூறப்படும் அதேவிடத்து மனதினாலும் சொல்லாலும், செயலாலும் செய்யத்தகாதவை எவையென்பதையும் கூறிநிற்பதோடு நல்லெண்ணச் சிந்தனைகள் சமூகத்தின் அன்புடனும் அருளுடனும் வளம் பெறுவதற்கு செய்யத்தகாத குற்றங்கள் யாவையெனவும் சமுதாயம் மனவெண்ணம் வளம் பெறும் வகையில் தனிமனித எண்ணங்களினோடு சமுதாய நல்லிணக்கச் சிந்தனைகள் பலவற்றைக் கூறியிருப்பது திருக்குறளின் தலைசிறந்த பண்பாக அமைந்து விளங்குகின்றது.

## உசாத்துணை நூல்கள்

1. திருக்குறள் (2004) ஆராய்ச்சிப்பதிப்பு, கி.வா ஜகந்நாதன் (பதி) இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயம் கோயம்பத்தூர் (3ம் பதிப்பு)
2. திருக்குறள் (1949) அறத்துப்பால் மூலமும் பரிமேலழகர் உரையும் சடகோப இராமானுஜாசாரிய ஸ்வாமிகளின் குறிப்புரையுடன் திருவல்லிக்கேணி

௸